எங்கும் தமிழ் ! எதிலும் தமிழ் !!

### தமிழ் வளர்ச்சித் துறை

# அம்மா இலக்கிய விருது - 2021

## விருதாளர் : முனைவர் மு. சற்குணவதி



## தகுதியுரை

முனைவர் மு. சற்குணவதி அவர்கள், இராணிப்பேட்டை மாவட்டம் மங்கம்மாள் பேட்டையில் 23.09.1961 ஆம் நாள் பிறந்தவர். பெற்றோர் திரு. முருகேசன், திருமதி பார்வதி.

தமிழில் முதுகலை, முனைவர், முதுமுனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளதோடு, நாட்டுப்புறவியலும், இதழியலும் ஆகியவற்றில் முதுநிலைப் பட்டயங்களையும் பெற்றவராவார். முனைவர் மு. சற்குணவதி தமிழில் முது முனைவர் (டி.லிட்.) பட்டம் பெற்ற முதல் மங்கை என்ற பெருமை பெற்றவர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி நிறுவனத்தில், தமிழ்த்துறைப் பேராசிரியையாகவும், தலைவராகவும் 27 ஆண்டுகள் பணிபுரிந்தவர். தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் முதுவர், சின்னமலையில் வாழும் லம்பாடிகள், தளிஞ்சி மலையில் வாழும் பளியர், சர்க்கார்பதி காடுகளில் வாழும் இருளர் ஆகிய நான்கு மலை மக்கள் பற்றி கள ஆய்வு செய்து நூலாக்கம் செய்துள்ளார்.

பாதையற்ற, அடர்ந்த காடுகள் நிறைந்த, கொடிய விலங்குகள் வாழும் மேற்குத் தொடர்ச்சி மலையில் கால்நடையாக ஏறிச் சென்று முதுவர் மக்களை ஆய்வு செய்ததுடன் அந்த மக்களுக்குக் கல்வி விழிப்புணர்வை வழங்கி உள்ளார். அதன் விளைவாக இன்று 17 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். கடந்த 2022 ஜூன் மாதம் 23 ஆம் தேதி 15 பேர் அடங்கிய குழுவுடன் மலைக்குச் சென்று, கல்வி உபகரணங்கள் வழங்கிக்கல்விப் பணி செய்துள்ளார். கோவை மாவட்டத்தில் உள்ள கணியூரில் ஓர் ஆண்டு காலம் கள ஆய்வு செய்து 'உடுக்கடியில் அண்ணன்மார் கதைப் பாடலை' 25 ஒலி நாடாக்களில் சேகரித்து வந்து குறுந்தகடாக்கி 1050 பக்கங்களில் நூலாக வெளியிட்டுள்ளார்.

நாட்டுப்புறவியல் சங்க இலக்கியம், சமுதாயவியல், படைப்பிலக்கியம், நீதி இலக்கியம் ஆகிய பொருண்மைகளில் 25 ஆய்வு நூல்களைப் படைத்தவர். 'தமிழக நாட்டுப்புறவியல்', 'இலக்கிய இயல்', 'மண்ணில்வாழும் மலைமக்கள் லம்பாடிகள்', 'தென்றல் பாடும் தெம்மாங்கு', 'ஊரக மக்கள் வாழ்வியல்', 'புத்தரின் போதனைகள்' ஆகியவை இவர் படைத்த நூல்களின் அணிவரிசையாகும்.

மாநில அளவிலும், துணைக் கண்ட அளவிலும், உலகளவிலும் 247 கருத்தரங்குகளில் கலந்து கொண்டவர். ஆய்வுக் கட்டுரைகளாகவும் சமுதாயக் கட்டுரைகளாகவும் நூற்றுக்கணக்கில் கட்டுரைகளை எழுதிக் குவித்தவர். பல்வேறு அமைப்புகளால் 12 விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றவர்.

முனைவர் மு. சற்குணவதி அவர்களின் இலக்கியப் பெரும்பணிகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு 2021 ஆம் ஆண்டிற்கான 'அம்மா இலக்கிய விருது' அளித்து இரண்டு இலட்சம் உரூபாய்க்கான காசோலையும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கின்றது.

சென்னை
18.07.2022

மு.க.ஸ்டாலின்
முதலமைச்சர்